திரு. இரா. தாமரைக்கனி : திராவிட முன்னேற்றக் கழக அரசால் கைவிடப்பட்ட இந்தத் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உள்ள அமைச்சரவையில் உள்ள நம் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவதற்கு முன் வந்ததற்காக என் தொகுதி மக்கள் சார்பில் முதலில் நன்றி தெரிவித்துக் கொண்டு, இந்தத் திட்ட வேலை எப்போது ஆரம்பிக்கப்படும், எப்போது முடியும், இதற்காக எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்படவுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 1971-ல் போட்ட திட்டம் 60 குடியிருப்புகளுக்கு ரூ. 4.82 இலட்சம். ஆனால் இப்போது ஒன்றும் நஷ்டம் இல்லை. தற்போது ரூ. 11.13 லட்சம் மதிப்பு கொண்ட 96 குடியிருப்புகள் கட்டுவதற்காக பள்ளிவாசல் குடிசைப் பகுதி அகற்றும் திட்டத்தைப் புதுப்பித்து வீட்டுவசதி வாரியம் அரசுக்கு அனுப்பியுள்ளது. நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை புதுப்பிப்பது சம்பந்தமான செயற்குறிப்புகளை வீட்டுவசதி வாரியம் இன்னும் அனுப்பவில்லையானாலும், இத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அவை மிகவும் தேவையாகும். தொடர்பான மேல் நடவடிக்கைகளை மேற்கொள்வது என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தமிழ்நாடு முழுவதும் இந்த மாதிரி வீட்டுவசதி வாரியத்திலிருந்து திட்டம் போட்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டாமல் இருந்து விட்டார்கள். மீண்டும் திருவில்லிப்புத்தூரில் கட்டுவது போல் கட்டுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எங்கெங்கே இப்படியெல்லாம் விடப்பட்டிருக்கிறது என்ற தகவலைச் சேகரித்துக் கொடுத்தால் விரைவில் அவைகளுக்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செய்யப்படும்.

## வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

* குறுகிய கால வினா 11— திரு. எஸ்.ஜே. இராமசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருவலத்தில் உள்ள வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 400 ஊக்க போனஸ் வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது உண்மையா ?

1978 மார்ச் 28]

(ஆ) ஆம், எனில் எத்தனை ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டது? எவ்வளவு தொகை வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம். நவம்பர் 1976 முதல் ஜனவரி 1977 முடிய உள்ள மாதங்களில் முன்பட்ட நடவு செய்து 1977—78 சீசன் அறைவைக்கு வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு சப்ளை செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 400 முன் பட்ட நடவு மானியமாக வழங்க ஆலை வாக்குறுதி அளித்துள்ளது.

(ஆ) 3674 ஏக்கர்களில் முன் பட்ட சாகுபடி செய்யப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. மானியத் தொகை கரும்பை அறுவடை செய்து ஆலைக்கு வழங்கிய பின்னரே வழங்கப்படு மாதலால், இதுவரை மான்யம் ஏதும் வழங்கப்படவில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 400 அளிப்பதாக சர்க்கரை ஆலை உத்தரவாதம் அறிவித்தும் கூட— அப்படி உத்தரவாதம் கொடுத்து கரும்பு வெட்டியிருக்கிறார்கள்— ஆனால் இதுவரையில் அதைக் கொடுப்பதற்கு அவர்களுக்கு மனம் வரவில்லை. ஆனால் கரும்பு வெட்டி ஆலைக்கு அனுப்பி அதை சர்க்கரையாக்கி விற்றுவிட்ட பிறகும்கூட இதைக் கொடுக்காமல் இருப்பதற்கான காரணம் என்ன ? இனிமேலாவது உடனடியாக, ஒன்றிரண்டு மாதங்களுக்குள் கொடுப்பதற்கு வேண்டிய நட வடிக்கைகளை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நிதி நிலைமை சரியாக இல்லாத காரணத்தால்தான் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. நிதிநிலை சரியானவுடன் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

* குறுகிய கால வினா 12— திரு. எஸ்.ஜே. இராமசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் கூட்டுறவு சர்க் கரை ஆலையில் கரும்பு விவசாயம் செய்த விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 200 ஊக்க போனஸ் தொகை கொடுப்பதாகச் சொன்னதற்கிணங்க ஆலையில் எத்தனை ஏக்கருக்கு எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது ?